# நலவாழ்விற்கான மக்கள் செயல்பாடு
COMMUNITY ACTION FOR HEALTH

## தொலைநோக்கு பார்வை (VISION)

தமிழகத்தில், மக்களின் முழுமையான பங்கேற்புடன் கூடிய செயல்பாடுகளின் வழியாக அடித்தள ஜனநாயக அமைப்புகளில் நலவாழ்வு குறித்த புரிதல் வலுப்படுத்தப்பட்டு தரமான நலச்சேவைகள் உறுதிப்/உத்தரவாதப்படுத்தப்படும்.

அரசு நலச்சேவைகள் குறித்தான விழிப்புணர்வு மேம்படுத்தப்படும்; தனியார் மருத்துவ நிறுவனங்களின் செயல்பாடுகள் முறைபடுத்தப்படும்; அரசு அமைப்புகளுக்கும், மக்களுக்குமிடையேயான உறவு வலுப்படுத்தப்பட்டு, அனைத்து கொள்கை முடிவுகளும் மக்களுடனான கலந்தாய்வின் மூலம் மேற்கொள்ளப்படும்.

பாரபட்சமின்றி அனைத்து தரப்பு மக்களுக்கும், அனைத்து வசதிகளையும் இலவசமாக எவ்வித எதிர்பார்பு மற்றும் மறைமுக செலவுகளில்லாமல் அரசு அமைப்புகள் வழங்கும்.

## செயல்திட்டம் (MISSION)

- பிரச்சாரங்கள், கருத்துப் பிரசுரங்கள், கலை நிகழ்ச்சிகள், பயிற்சிகள் போன்றவை வழியாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்;
- நலவாழ்வு பணியாளர்கள், உள்ளாட்சி உறுப்பினர்கள் மற்றும் சமூக நல அமைப்புகளுக்கு பயிற்சி வழங்குதல்;
- மக்கள் பிரச்சனைகள் / தேவைகள் குறித்து சுகாதார துறை பணியாளர்களுக்கு வலியுறுத்தல் கூட்டங்கள் நடத்துதல்;
- பல்வேறு மட்டங்களில்/தரப்புகளில் உள்ள மக்களோடு கலந்தாலோசனை நடத்துதல்;
- ஊடகம், ஊடகவியலாளர்களுக்கு திட்ட செயல்பாடுகள் குறித்த கருத்துப்பரிமாற்றம் நடத்துதல்;
- இத்திட்டம் பற்றி தொடர்ச்சியான மதிப்பீடும், திட்டமிடுதலும் மேற்கொள்ளுதல்; பதிவேடுகளை முறையாக பராமரித்தல்;
- நேர்மறை / எதிர் மறையான கள மற்றும் நலச்சேவை அனுபவங்களை ஆவணப்படுத்துதல்; அவ்வனுபவங்களை பகிர்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துதல்;
- இத்திட்டத்தின் அனைத்து படிநிலைகளுக்கிடையே சிறப்பான ஒருங்கிணைப்பும், பகிர்தலும் மேற்கொள்ளுதல்;
- இச்செயல்பாடுகளை மக்களின் கலாச்சார செயல்பாடுகளில் ஒன்றாக்குதல்.

## பங்காளிகள் (BOUNDARY PARTNERS)

1. கிராம நலவாழ்வு குழு / மக்கள்
2. நலச்சேவையாளர்கள் – துப்புரவு பணியாளர் / கிராம செவிலியர் / சுகாதார ஆய்வாளர் / மருத்துவர் / அங்கன்வாடி
3. உள்ளாட்சி தலைவர்/ உறுப்பினர் / கிராம முக்கியஸ்தர்கள்
4. சுயஉதவி குழுக்கள் / பெண்கள் அமைப்புகள் / பிற அமைப்புகள் / இயக்கங்கள்
5. பள்ளி / ஆசிரியர்கள்/ மாணவர்கள்
6. ஊடகவியலாளர்கள்

## மனநிலை/உறவு முறை / செயல்பாடுகளில் எதிர்பார்க்ககூடிய மாற்றங்கள்

| பங்காளிகள் | மனநிலை / உறவு முறை / செயல்பாடுகள் |
|---|---|
| 1. கிராம நலவாழ்வு குழு / மக்கள் | பிரச்சனைகளை / தேவைகளை அடையாளம் காண்பார்கள்.<br>ஒடுக்கப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள்.<br>கிராம சுகாதார திட்டத்தை தயாரிப்பார்கள்; அதை திட்டமிட்டு அனைத்து மட்டங்களுக்கும் எடுத்துச்செல்வர்.<br>அரசாங்கம் – மக்கள் – குழுவிற்கிடையே சுமுகமான உறவுமுறை; குறைந்தபட்சம் சச்சரவின்றி இருப்பர்.<br>மாதமொருமுறை கூடுவர்.<br>ஆவணப்படுத்துவர்.<br>அரசின் அனைத்து சேவைகளையும் எடுத்துரைப்பர்.<br>தனிநபர் பாதிக்கப்பட்டாலும் உதவுவர்.<br>நிதியை முறையாக நிர்வகிப்பார்கள். |
| 2. நலச்சேவையாளர்கள் – துப்புரவு பணியாளர் / கிராம செவிலியர் / சுகாதார ஆய்வாளர் / மருத்துவர் / அங்கன்வாடி | சேவையில் ஈடுபாட்டுடன் இருப்பர்; கடமை உணர்வுடன் செயல்படுவர்.<br>அர்ப்பணிப்புடனும், அன்புக்குறியவராகவும் இருப்பர்.<br>ஆரோக்கியமான, நட்பான, புரிதலுடன் கூடிய உறவுமுறையை வலுப்படுத்துவர்.<br>மக்களின் உரிமைகளை மதித்து சரி சமமாக அணுகுவர்.<br>மக்களை மையப்படுத்திய நலவாழ்வு திட்டங்களை ஊக்கப்படுத்துவர்.<br>அனைத்து நலபணியாளர்களும் சேவை அளிக்கும் பகுதியில் தங்குவார்கள். |

| | | |
|---|---|---|
| | | உத்திரவாதப்படுத்தப்பட்ட சேவைகளை உறுதிப்படுத்துவார்கள்.<br>தேவைகளுக்கேற்ப/தேவைப்படுவோருக்கு நலச்சேவைகளில் முன்னுரிமை அளிப்பார்கள். |
| 3. | உள்ளாட்சி தலைவர்/ உறுப்பினர் / கிராம முக்கியஸ்தர்கள் | ஆட்சியர் மூலமாக கீழ் நிலைகளுக்கு ஆணை பிறபித்தல்.<br>உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் முக்கியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம். இணைந்து செயல்படுவதற்கான இணக்கமான சூழல் உருவாக்குதல்.<br>கிராம சுகாதார அட்டை தயாரிப்பு; இதனை செயல்படுத்ததல், அடுத்த மற்றும் பிற நிலைகளுக்கு எடுத்துச்செல்லுதல்.<br>உள்ளாட்சி உறுப்பினர், கிராம முக்கியஸ்தர்கள் மற்றும் மக்களிடையே மேம்பட்ட உறவுமுறை.<br>பிற துறை பிரச்சனைகள் போன்று நலவாழ்வு தேவைகளை/பிரச்சனைகளை கவனம் செலுத்தி சம்மந்தப்பட்ட துறை அளவில் கொண்டு செல்லுதல்.<br>நலவாழ்வை கிராம சபை தீர்மானத்துக்கு கொண்டுவருதல்; வெளிப்படைதன்மையுடன் செயல்படவைத்தல்.<br>நலவாழ்வு முகாம் மற்றும் குழுக்கள் மூலமாக நலவாழ்வு செயல்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.<br>விழாக்கள், தினங்கள் போன்ற கலாச்சார செயல்பாடுகளில் நலவாழ்வு அம்சங்களை இணைத்தல்.<br>எந்தவித பேதமின்றி மக்களை மையப்படுத்திய நலவாழ்வு திட்டங்களை ஊக்கப்படுத்துவார்கள். |
| 4. | சுயஉதவி குழுக்கள் / பெண்கள் அமைப்புகள் / பிற அமைப்புகள் / இயக்கங்கள் | பல அமைப்புகளுக்குள் இத்திட்டத்தின் நடைமுறை ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும்.<br>மக்களுக்கும் பணியாளர்களுக்கிடையேயான அச்சம், வெறுப்புணர்வு நீங்கி, ஆரோக்கியமான தொடர்புகள் வலுப்பெற்றிருக்கும்.<br>ஒருங்கிணைந்த செயல்பாட்டிற்கான விழிப்புணர்வு பெற்றிருப்பர்.<br>நலவாழ்வு பிரச்சனைகளில் கவனம் செலுத்துவர், பிரச்சனை தீர்ப்பாளர்களாகவும் செயல்படுவர்.<br>கிராம நலவாழ்வு குழுவின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக செயல்படுவர்.<br>தங்கள் குழுவின் செயல்பாடுகளில் நலவாழ்விற்கான செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பர். |
| 5. | பள்ளி / ஆசிரியர்கள்/ மாணவர் சமுதாயம் | விழிப்புணர்வடைந்து கிராம நலவாழ்வு செயல்பாடுகளிலும், கிராம சுகாதார குழுவின் செயல்பாடுகளில் பங்கேற்பார்கள். பள்ளி சுகாதார திட்டம், வளர் இளம் பருவத்தினர் சுகாதாரம் போன்றவை செயல்படுத்தப்படும்.<br>நலவாழ்வு கல்வி பள்ளியில் முக்கியத்துவம் பெறும். பள்ளிகளில் நடைமுறையில் உள்ள சுகாதார குழு மேம்படுத்தப்படும்.<br>பள்ளி சுகாதார செயல்பாடுகள் முறைபடுத்தப்படும்.<br>நலவாழ்வுப் பணிகளை ஊக்குவிப்பவர்களாக மாறுவர். |
| 6. | ஊடகவியலாளர்கள் | சுகாதார/நலச்சேவைகள் குறித்த செய்திகள் வெளியிடுவதன் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் உணர்ந்திருப்பார்கள்.<br>அரசு/தனியார் நலசேவைகளை தாங்களே ஆய்வு செய்து, பதிவு செய்து, எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், பாரபட்சமின்றி மருத்துவ சேவைகள் தரத்தைக் குறித்த செய்திகளை வெளியிடுவர்.<br>நலவாழ்வு குறித்த செய்திகளுக்கான தொடர்பாளர்களாக 'நலவாழ்வு செயல்பாட்டாளர்களை' கருதுவார்கள்.<br>நலவாழ்வு செய்திகளுக்காக சிறப்பு பக்கங்களை ஒதுக்குவார்கள். |

<table>
<tr>
<td>பங்காளிகள் 1<br>கிராம நலவாழ்வு குழு / மக்கள்</td>
<td colspan="2">முன்னேற்ற குறியீடுகள் (PROGRESS MARKERS)</td>
<td>வழிமுறை வரைபடம் (STRATAGEY MAPS)</td>
</tr>
<tr>
<td rowspan="3">மனநிலை / உறவு முறை / செயல்பாடுகள்<br><br>பிரச்சனைகளை / தேவைகளை அடையாளம் காண்பார்கள்.<br><br>ஒடுக்கப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள்.<br><br>கிராம சுகாதார திட்டத்தை தயாரிப்பார்கள்; அதை திட்டமிட்டு அனைத்து மட்டங்களுக்கும் எடுத்துச்செல்வர்.<br><br>அரசாங்கம் – மக்கள் – குழுவிற்கிடையே சுமுகமான உறவுமுறை; குறைந்தபட்சம் சச்சரவின்றி இருப்பர்.<br><br>மாதமொருமுறை கூடுவர்.<br><br>ஆவணப்படுத்துவர்.<br><br>அரசின் அனைத்து சேவைகளையும் எடுத்துரைப்பர்.<br><br>தனிநபர் பாதிக்கப்பட்டாலும் உதவுவர்.<br><br>நிதியை முறையாக நிர்வகிப்பார்கள்.</td>
<td>எதிர்பார்ப்பு</td>
<td>1. மாதமொருமுறை கூட்டத்தில் கலந்துகொள்ள ஆர்வமாக இருப்பார்கள்.<br>2. அரசு நலச்சேவைகள் குறித்த புரிதலுடன் இருப்பார்கள்.<br>3. கூட்ட நிகழ்வுகளை ஆவணப்படுத்துவார்கள்.<br>4. அரசு நலவாழ்வு முகாம்கள் நடந்தேறுவதை உறுதிசெய்வார்கள்.<br>5. ஒடுக்கப்பட்டவர்கள் நலவாழ்வு குழுவில் பங்கேற்பார்கள்.<br>6. கிராம சுகாதார அட்டை தயாரிப்பார்கள்.</td>
<td rowspan="3">I1 வளங்கள்<br>கிராம நலவாழ்வு குழு உருவாக்கம்<br>I2 வல்லமை மேம்பாடு<br>வெளியீடுகள், பிரசுரங்கள் வெளியிடுதல்;<br>அரசு நலச்சேவைகள், அரசு ஆணைகள் குறித்து விழிப்புணர்வு.<br>நலவாழ்வு உரிமை குறித்த புரிதல்.<br>திட்டமிடல், நலசேவைகள், நலவாழ்வு திட்டம் தயாரிப்பு குறித்து பயிற்சி<br>ஆவணப்படுத்துதல்.<br>நலவாழ்வு அட்டை தயாரிப்பு<br>கூட்டமைப்பு / இணையம் அமைப்பதற்கான செயல்பாடுகள்.<br>திட்ட பணியாளர்களுக்கான 5 பயிற்சிகள், மாவட்ட பயிற்சியாளருக்கான 4 பயிற்சிகள், கிராம சபை கூட்டங்களில் பேச பயிற்சி.<br>I3 ஆதரவு<br>பயிற்சி பெற்ற தொண்டர்கள்;<br>மாதாந்திர கூட்டங்கள்.<br>E1 கொள்கை<br>அரசு ஆணை,<br>அறிமுக கூட்டங்கள், துணை இயக்குனரிடம் கடிதம் பெறுதல்.<br>E2 சுற்றுச்சூழல்<br>கிராமத்தில் பல்வேறு குழுக்களுளின் கூட்டங்களில் பங்கேற்பு.<br>அரசு நல திட்டங்கள் குறித்தான விழிப்புணர்வு, வீதி நாடகங்கள்<br>E3 கூட்டமைப்பு / தொடர் செயல்பாடு<br>பஞ்சாயத்துடன், கிராமசபையுடன், மேல் மட்ட குழுவுடனும் தொடர்ச்சியான ஈடுபாடு.</td>
</tr>
<tr>
<td>சிறப்பு</td>
<td>7. கூட்டத்தில் முழுமையாக அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்று கருத்துக்களை பகிர்ந்து கொள்வார்கள்.<br>8. அரசு நலச்சேவைகள் குறித்து மக்களுக்கான தகவல் தொடர்பாளர்களாக இருப்பார்கள்.<br>9. பேரிடர், நோய்தொற்று போன்ற காலங்களில் சிறப்பு முகாம்கள் மக்களின் தேவைக்கேற்ப நடத்துவார்கள்.<br>10. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நலவாழ்வு சேவைகளில் கூடுதல் முக்கியத்துவம் அளிப்பார்கள்.<br>11. கிராம சுகாதார அட்டை விவரங்களை கிராம சபை கூட்டங்களில் தீர்மானத்துக்கு வைத்து விவாதிப்பார்கள்.</td>
</tr>
<tr>
<td>பிரமாதம்</td>
<td>12. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை செயல்படுத்துதல்.<br>13. மக்கள், நலச்சேவைகளை பெறுவதை உறுதிசெய்தல்.<br>14. ஒடுக்கப்பட்டவர்கள் குழு கூட்டங்களில் ‘நலவாழ்வு செயல்பாடுகள்’ குறித்து விவாதிப்பது, திட்டமிடுது.<br>15. மக்களின் நலவாழ்வு அனுபவங்களை ஆவணப்படுத்துவார்கள்.<br>16. கிராம சபை கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை குறித்த காலங்களில் நிறைவேற்றுவர்.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td rowspan="4">பங்காளிகள் 2<br><br>நலச்சேவையாளர்கள் – துப்புரவு பணியாளர் / கிராம செவிலியர் / சுகாதார ஆய்வாளர் / மருத்துவர் / அங்கன்வாடி<br><br>மனநிலை / உறவு முறை / செயல்பாடுகள்<br><br>சேவையில் ஈடுபாட்டுடன் இருப்பர்; கடமை உணர்வுடன் செயல்படுவர்.<br><br>அர்ப்பணிப்புடனும், அன்புக்குறியவராகவும் இருப்பர்.<br><br>ஆரோக்கியமான, நட்பான, புரிதலுடன் கூடிய உறவுமுறையை வலுப்படுத்துவர். மக்களின் உரிமைகளை மதித்து சரி சமமாக அணுகுவர்.<br><br>மக்களை மையப்படுத்திய நலவாழ்வு திட்டங்களை ஊக்கப்படுத்துவர்.<br><br>அனைத்து நலபணியாளர்களும் சேவை அளிக்கும் பகுதியில் தங்குவார்கள்.<br><br>உத்திரவாதப்படுத்தப்பட்ட சேவைகளை உறுதிப்படுத்துவார்கள்.<br><br>தேவைகளுக்கேற்ப/தேவைப்படுவோருக்கு நலச்சேவைகளில் முன்னுரிமை அளிப்பார்கள்.</td>
<td colspan="2">முன்னேற்ற குறியீடுகள் (PROGRESS MARKERS)</td>
<td>வழிமுறை வரைபடம்<br>(STRATAGEY MAPS)</td>
</tr>
<tr>
<td>எதிர்பார்ப்பு</td>
<td>1. கிராம நலவாழ்வு குழு உறுப்பினர்களை அங்கீகரித்து அவர்களின் குரல்களை கேட்பார்கள்.<br>2. பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படும். தகவல்கள் சம்மந்தப்பட்டவர்களுடன் பகிர்ந்துக்கொள்ளப்படும்.<br>3. நிதி & நிதி மேலாண்மை பற்றி குழுவிற்கு தகவல் அளிக்கப்படும்.<br>4. மருத்துவர் & பணியாளர்களின் மறுஆய்வு கூட்டத்திற்கு நலவாழ்வு குழுவை அழைப்பார்கள்.<br>5. கிராம சுகாதார அட்டை/திட்டம் தயாரிப்பில் அனைத்து நலவாழ்வு சேவையாளர்களும் கலந்துகொள்கிறார்கள்.<br>6. மக்களுக்குத் தேவையான மருந்துகள் (விஷக்கடி உட்பட) தடையின்றி கிடைப்பது உறுதிசெய்யப்படுகிறது.<br>7. மக்கள் சாசனம் மற்றும் தகவல் பலகை வைக்கப்பட்டிருத்தல். அதில் மருத்துவர் பணி அட்டவணை, மருந்து உட்பட பொருட்களின் கையிருப்பு நிலை பட்டியல் போடப்பட்டிருத்தல்.<br>8. அத்தியாவசிய நலசேவைகளில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்த வழிகாட்டிகள் முழுமையாக தெரியப்படுத்த வேண்டும்.</td>
<td rowspan="3">I1 வளங்கள்<br>அறிமுக சந்திப்பு<br>I2 வல்லமை மேம்பாடு<br>உணர்வூட்டல் கூட்டங்கள், மாநில/மாவட்ட மருத்துவர்களுக்கு நலஉரிமை குறித்த கூட்டங்கள்<br>I3 ஆதரவு<br>மருத்துவருடன் கிராம நலவாழ்வு குழு கூட்டங்களில் பங்கெடுப்பது.<br>கூட்ட முடிவுகளை மருத்துவருக்கு, துணை இயக்குனருக்கு தெரியப்படுத்துவது.<br>E1 கொள்கை<br>அரசு ஆணை, மறுஆய்வு கூட்டங்களில் குழு பங்கெடுப்பதற்கு துணை இயக்குநரிடம் உத்தரவு பெறுதல்<br>E2 சுற்றுச்சூழல்<br>ஊடக அறிக்கை<br>பொது கருத்துக்கேட்பு கூட்டம்<br>E3 கூட்டமைப்பு / தொடர் செயல்பாடு<br>செவிலியர், அங்கன்வாடி உறுப்பினர்கள் நலக்குழு கூட்டங்களில் பங்கெடுக்கச்செய்வது.</td>
</tr>
<tr>
<td>சிறப்பு</td>
<td>9. அனைத்து பணியாளர்களும் அவரவர் பணி நேரங்களில் முழுமையாக பணியாற்றுவார்கள்.<br>10. நிதி & நிதி மேலாண்மை பற்றி மக்களின் கருத்து கேட்டு செயல்படுத்துதல்.<br>11. மருத்துவர் & பணியாளர்கள் மறுஆய்வு கூட்டத்தில் நலவாழ்வு குழுவின் கருத்துக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.</td>
</tr>
<tr>
<td>பிரமாதம்</td>
<td>12. தாய் சேய் நல அட்டையை அந்தந்த தாய்மார்கள் பொறுப்பில் கொடுப்பது.<br>13. நிதி & நிதி ஆளுமை பற்றிய முடிவுகளை குழு சுயமாக எடுக்கும், செயல்படுத்தும்.<br>14. மறுஆய்வு கூட்டத்தில் நலவாழ்வு குழுவினர் முன்வைத்த கருத்துக்கள் மீது தீர்வு நடவடிக்கை எடுப்பார்கள்.<br>15. மறைமுக தேவையற்ற செலவீனங்கள் வெகுவாக குறைக்கப்பட்டிருக்கும்.</td>
</tr>
</table>

<table>
<tr>
<th rowspan="2">பங்காளிகள் 3<br>உள்ளாட்சி தலைவர்/ உறுப்பினர் / கிராம முக்கியஸ்தர்கள்</th>
<th colspan="2">முன்னேற்ற குறியீடுகள் (PROGRESS MARKERS)</th>
<th>வழிமுறை வரைபடம் (STRATAGEY MAPS)</th>
</tr>
<tr>
<td>எதிர்பார்ப்பு</td>
<td>1. கிராம நலவாழ்வு குழுவில் பங்கேற்கின்றனர்.<br>2. கிராம நலவாழ்விற்காக திட்டமிடுகின்றனர்.<br>3. கிராம சுகாதார அட்டை/திட்டம் தயாரிப்பில் கலந்துகொள்கிறார்கள்.<br>4. நலகுழு தொடச்சியாக இயங்குவதற்கு ஒத்தழைப்பையும், ஆதரவையும் அளிக்கின்றனர்.<br>5. உள்ளாட்சி தலைவர்கள் நோயாளிகள் நலகுழுவின் செயல்பாடுகளை அறிந்துகொள்கின்றனர்.</td>
<td rowspan="3">I1 வளங்கள்<br>அறிமுக சந்திப்பு<br>I2 வல்லமை மேம்பாடு<br>ஒன்றிய கவுசிலர் & தலைவர்/ உறுப்பினர் / கிராம முக்கியஸ்தர்களுக்கு உணர்வூட்டல் கூட்டங்கள்<br>ஒன்றிய/மாவட்ட அளவிலான கூட்டங்கள். நலஉரிமை கூட்டங்கள். கிராம திட்டம் தயாரிப்பில் ஈடுபடுத்துதல்<br>I3 ஆதரவு<br>மாத கூட்டங்களில் பங்கெடுக்க வைப்பது. கூட்ட முடிவுகளை தெரியப்படுத்துவது. உள்ளாட்சி கூட்டங்களில் நலவாழ்வை நிகழ்ச்சி நிரலாக சேர்த்தல்<br>E1 கொள்கை<br>வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஆட்சியரிடம் அரசு ஆணை (அ) கடிதம் பெருவது.<br>கிராம சபை கூட்டங்களில் நலவாழ்வை நிகழ்ச்சி நிரலாக கொண்டு வருவதற்கு அழுத்தம் கொடுப்பது.<br>E2 சுற்றுச்சூழல்<br>ஊடக அறிக்கை. பொது கருத்துக்கேட்பு கூட்டம். கிராம சபை கூட்டங்களில் கிராம நலவாழ்வு அட்டை மற்றும் திட்டத்தை சமர்பித்தல் மற்றும் ஒப்புதல் வாங்குதல்.<br><br>E3 கூட்டமைப்பு / தொடர் செயல்பாடு<br>நல செயல்பாடுகளில் பங்கெடுப்பு</td>
</tr>
<tr>
<td rowspan="2">மனநிலை / உறவு முறை / செயல்பாடுகள்<br><br>ஆட்சியர் மூலமாக கீழ் நிலைகளுக்கு ஆணை பிறபித்தல்.<br>உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் முக்கியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம். இணைந்து செயல்படுவதற்கான இணக்கமான சூழல் உருவாக்குதல்.<br>கிராம சுகாதார அட்டை தயாரிப்பு; இதனை செயல்படுத்ததல், அடுத்த மற்றும் பிற நிலைகளுக்கு எடுத்துச்செல்லுதல்.<br>உள்ளாட்சி உறுப்பினர், கிராம முக்கியஸ்தர்கள் மற்றும் மக்களிடையே மேம்பட்ட உறவுமுறை.<br>பிற துறை பிரச்சனைகள் போன்று நலவாழ்வு தேவைகளை/பிரச்சனைகளை கவனம் செலுத்தி சம்மந்தப்பட்ட துறை அளவில் கொண்டு செல்லுதல்.<br>நலவாழ்வை கிராம சபை தீர்மானத்துக்கு கொண்டுவருதல்; வெளிப்படைதன்மையுடன் செயல்படவைத்தல்.<br>நலவாழ்வு முகாம் மற்றும் குழுக்கள் மூலமாக நலவாழ்வு செயல்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.<br>விழாக்கள், தினங்கள் போன்ற கலாச்சார செயல்பாடுகளில் நலவாழ்வு அம்சங்களை இணைத்தல்.<br>எந்தவித பேதமின்றி மக்களை மையப்படுத்திய நலவாழ்வு திட்டங்களை ஊக்கப்படுத்துவார்கள்.</td>
<td>விருப்பு</td>
<td>6. கிராம நலவாழ்விற்காக திட்டமிட்டவற்றை செயல்படுத்தவது. அதன் தேவைக்காக நிதி ஒதுக்குவது.<br>7. கிராம சபையில் நலவாழ்வு திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விவாதிப்பது.<br>8. கிராம நலவாழ்வு குழுவின் ஆலோசனைகளை ஏற்று செயல்படுத்துகின்றனர். குறிப்பாக அடிப்படை காரணிகளின் நிலை குறித்த ஆலோசனைகள்.<br>9. நோயாளிகள் நலகுழுவின் செயல்பாடகளில் ஆக்கப்பூர்வமாக பங்கெடுக்கிறார்கள்.</td>
</tr>
<tr>
<td>பிரமாதம்</td>
<td>10. கிராம நலக்குழுவை உள்ளாட்சி அமைப்பே பொறுப்பேற்று நடத்துவது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<th>பங்காளிகள் 4<br><br>சுயஉதவி குழுக்கள் / பெண்கள் அமைப்புகள் / பிற அமைப்புகள் / இயக்கங்கள்</th>
<th colspan="2">முன்னேற்ற குறியீடுகள் (PROGRESS MARKERS)</th>
<th>வழிமுறை வரைபடம்<br>(STRATAGEY MAPS)</th>
</tr>
<tr>
<td rowspan="3">மனநிலை / உறவு முறை / செயல்பாடுகள்<br><br>பல அமைப்புகளுக்குள் இத்திட்டத்தின் நடைமுறை ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும்.<br><br>மக்களுக்கும் பணியாளர்களுக்கிடையேயான அச்சம், வெறுப்புணர்வு நீங்கி, ஆரோக்கியமான தொடர்புகள் வலுப்பெற்றிருக்கும்.<br><br>ஒருங்கிணைந்த செயல்பாட்டிற்கான விழிப்புணர்வு பெற்றிருப்பர்.<br><br>நலவாழ்வு பிரச்சனைகளில் கவனம் செலுத்துவர், பிரச்சனை தீர்ப்பாளர்களாகவும் செயல்படுவர்.<br><br>கிராம நலவாழ்வு குழுவின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக செயல்படுவர்.<br><br>தங்கள் குழுவின் செயல்பாடுகளில் நலவாழ்விற்கான செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பர்.</td>
<td>எதிர்பார்ப்பு</td>
<td>1. நலவாழ்விற்கான செயல்பாட்டு திட்டத்தின் வழிமுறை மற்றும் கிராம நலவாழ்வு குழு பற்றி அறிந்திருக்கிறார்கள்.<br><br>2. கிராம நலவாழ்வு குழு பற்றிய கருத்துக்கள், முடிவுகளை பெண்கள் குழுக்களில் பகிர்ந்துக்கொள்கிறார்கள்.<br><br>3. கிராம சுகாதார அட்டை/திட்டம் தயாரிப்பில் கலந்துகொள்கிறார்கள்.</td>
<td rowspan="3">I1 வளங்கள்<br>அறிமுக சந்திப்பு<br>I2 வல்லமை மேம்பாடு<br>உறுப்பினர்களுக்கான உணர்வூட்டல் கூட்டங்கள்<br>நலஉரிமை கூட்டங்கள் நடத்துதல்.<br>கிராம திட்டம் தயாரிப்பில் ஈடுபடுத்துதல்.<br>I3 ஆதரவு<br>குழு கூட்டங்களில் நலவாழ்வை ஒரு பொருளாக சேர்பித்தல்.<br>மாவட்ட கூட்டமைப்புக்கு பயிற்சி கொடுத்தல்.<br>E1 கொள்கை<br>தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து ஆதரவு கடிதம் பெறுதல்.<br>E2 சுற்றுச்சூழல்<br>ஊடக அறிக்கை<br>பிரச்சாரத்தில் ஈடுபடவைப்பது.<br>E3 கூட்டமைப்பு / தொடர் செயல்பாடு<br>நல செயல்பாடுகளில் பங்கெடுப்பு, உள்ளூர் குழுக்களுடன் இணைப்பை ஏற்படுத்துதல், தங்கள் உறுப்பினர்களை நலகுழுவில் சேர்க்க தயார்படுத்துதல்.</td>
</tr>
<tr>
<td>சிறப்பு</td>
<td>4. பெண்கள் குழுக்களின் உயர் மட்ட கூட்டமைப்புகளில் கிராம நலவாழ்வு குழு பற்றிய கருத்துக்கள், முடிவுகளை பகிர்ந்துக்கொள்கிறார்கள்.<br><br>5. கிராம நலவாழ்வு பிரச்சனைகள் குறித்து நலவாழ்வு குழுவில் எழப்புவதற்கு உறுதுணையாகவும், அழுத்தம் கொடுக்கக்கூடியவர்களாகவும் உள்ளனர்.</td>
</tr>
<tr>
<td>பிரமாதம்</td>
<td>6. நலவாழ்வு குறித்த கொள்கை மாற்றத்திற்கு முன் நிற்கிறார்கள்.<br><br>7. நலவாழ்வுகான செயல்பாடுகளில் தன்னார்வமாக பங்கேற்கிறார்கள்.<br><br>8. நலவாழ்விற்காக இயக்கங்களை மக்கள் பங்கேற்புடன் ஏற்று நடத்துகின்றனர்.</td>
</tr>
</table>

| பங்காளிகள் 5 | முன்னேற்ற குறியீடுகள் (PROGRESS MARKERS) | | வழிமுறை வரைபடம் (STRATAGEY MAPS) |
|---|---|---|---|
| பள்ளி / ஆசிரியர்கள்/ மாணவர் சமுதாயம்<br><br>**மனநிலை / உறவு முறை / செயல்பாடுகள்**<br><br>விழிப்புணர்வடைந்து கிராம நலவாழ்வு செயல்பாடுகளிலும், கிராம சுகாதார குழுவின் செயல்பாடுகளில் பங்கேற்பார்கள். பள்ளி சுகாதார திட்டம், வளர் இளம் பருவத்தினர் சுகாதாரம் போன்றவை செயல்படுத்தப்படும்.<br><br>நலவாழ்வு கல்வி பள்ளியில் முக்கியத்துவம் பெறும். பள்ளிகளில் நடைமுறையில் உள்ள சுகாதார குழு மேம்படுத்தப்படும்.<br><br>பள்ளி சுகாதார செயல்பாடுகள் முறைபடுத்தப்படும்.<br><br>நலவாழ்வுப் பணிகளை ஊக்குவிப்பவர்களாக மாறுவர். | எதிர்பார்ப்பு | 11. கிராம நலவாழ்வு குழுவில் பங்கேற்கின்றனர்.<br>12. கிராம நலவாழ்விற்காக திட்டமிடுகின்றனர்.<br>13. கிராம சுகாதார அட்டை/திட்டம் தயாரிப்பில் கலந்துகொள்கிறார்கள்.<br>14. நலகுழு தொடச்சியாக இயங்குவதற்கு ஒத்தழைப்பையும், ஆதரவையும் அளிக்கின்றனர்.<br>15. உள்ளாட்சி தலைவர்கள் நோயாளிகள் நலகுழுவின் செயல்பாடுகளை அறிந்துகொள்கின்றனர். | **I1 வளங்கள்**<br>அறிமுக சந்திப்பு<br>**I2 வல்லமை மேம்பாடு**<br>உணர்வூட்டல் கூட்டங்கள்<br>நலஉரிமை கூட்டங்கள்<br>கிராம திட்டம் தயாரிப்பில் ஈடுபடுத்துதல். தேசிய சேவைத்திட்டம், பள்ளி செஞ்சிலுவை அமைப்பு மற்றும் பள்ளி நலவாழ்வு குழு உறுப்பினர்களுக்கும், வளர் இளம் பருவத்தினருக்கும் கூட்டம் நடத்துதல்.<br>**I3 ஆதரவு**<br>பள்ளி குழு கூட்டங்களில் நலவாழ்வை ஒரு பொருளாக சேர்த்தல்.<br>தங்கள் உறுப்பினர்களை நலகுழுவில் சேர்க்க தயார்படுத்துதல்.<br>**E1 கொள்கை**<br>மாவட்ட அட்சியர், பள்ளி கல்வி அலுவலர்களிடம் ஆதரவுக் கடிதம் பெறுதல்.<br>**E2 சுற்றுச்சூழல்**<br>ஊடக அறிக்கை,<br>பிரச்சாரத்தில் ஈடுபடவைப்பது,<br>நலவாழ்வு கண்காட்சி நடத்தல்,<br>நலவாழ்வு தினங்கள் கொண்டாடுதல்.<br>**E3 கூட்டமைப்பு / தொடர் செயல்பாடு**<br>நல செயல்பாடுகளில் பங்கெடுப்பு |
| | சிறப்பு | 16. கிராம நலவாழ்விற்காக திட்டமிட்டவற்றை செயல்படுத்தவது. அதன் தேவைக்காக நிதி ஒதுக்குவது.<br>17. கிராம சபையில் நலவாழ்வு திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விவாதிப்பது.<br>18. கிராம நலவாழ்வு குழுவின் ஆலோசனைகளை ஏற்று செயல்படுத்துகின்றனர். குறிப்பாக அடிப்படை காரணிகளின் நிலை குறித்த ஆலோசனைகள்.<br>19. நோயாளிகள் நலகுழுவின் செயல்பாடகளில் ஆக்கப்பூர்வமாக பங்கெடுக்கிறார்கள். | |
| | பிரமாதம் | 20. கிராம நலக்குழுவை உள்ளாட்சி அமைப்பே பொறுப்பேற்று நடத்துவது. | |

<table>
<tr>
<td>பங்காளிகள் 6<br><br>ஊடகம் / ஊடகவியலாளர்கள்</td>
<td colspan="2">முன்னேற்ற குறியீடுகள் (PROGRESS MARKERS)</td>
<td>வழிமுறை வரைபடம் (STRATAGEY MAPS)</td>
</tr>
<tr>
<td rowspan="3">மனநிலை / உறவு முறை / செயல்பாடுகள்<br><br>சுகாதார/நலச்சேவைகள் குறித்த செய்திகள் வெளியிடுவதன் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் உணர்ந்திருப்பார்கள்.<br><br>அரசு/தனியார் நலசேவைகளை தாங்களே ஆய்வு செய்து, பதிவு செய்து, எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், பாரபட்சமின்றி மருத்துவ சேவைகள் தரத்தைக் குறித்த செய்திகளை வெளியிடுவர்.<br><br>நலவாழ்வு குறித்த செய்திகளுக்கான தொடர்பாளர்களாக ‘நலவாழ்வு செயல்பாட்டாளர்களை’ கருதுவார்கள்.<br><br>நலவாழ்வு செய்திகளுக்காக சிறப்பு பக்கங்களை ஒதுக்குவார்கள்.</td>
<td>எதிர்பார்ப்பு</td>
<td>1. திட்டம் பற்றிய தகவல்கள் வெளியிடப்படுகிறது.<br>2. நலவாழ்வு தகவல்களை தானாகவே வெளியிடுகின்றனர்.<br>3. திட்டக்கூட்டங்களில் அழைப்பின் பேரில் கலந்துக்கொள்கின்றனர்.<br>4. திட்டத்துக்கான குழுக்களில் உறுப்பினராக உள்ளனர்.<br>5. பிற சமூக அமைப்புகளின் வெளியீடுகளிலும் நலவாழ்வு தகவல்கள் வெளிவருகின்றன.</td>
<td rowspan="3">I1 வளங்கள்<br>அறிமுக சந்திப்பு<br>உண்மை அனுபவங்களை அளிப்போம்<br>புள்ளி விவரங்கள் அளிப்போம்<br>I2 வல்லமை மேம்பாடு<br>உணர்வூட்டல் கூட்டங்கள்,<br>நலஉரிமை கூட்டங்கள்,<br>நலவாழ்வு அமைப்பின் செயல்பாடுகள் குறித்த பயிற்சி .<br>I3 ஆதரவு<br>ஊடகவியலாளகளுடன் சந்திப்புக்கள்.<br>கருத்து தாள்கள். பத்திரிக்கையாளர்கள் சங்கம்,<br>பத்திரிக்கையின் பொதுஜன தொடர்பாளர்களுடன் கூட்டம்.<br>E1 கொள்கை<br>சங்கங்கள் மற்றும் அமைப்புகளோடு நல்ல தொடர்பு.<br>E2 சுற்றுச்சூழல்<br>பிரச்சாரங்களுக்கு ஒத்துழைப்பு<br>E3 கூட்டமைப்பு / தொடர் செயல்பாடு<br>வழிகாட்டுதல் குழுவில் உறுப்பினராக்குதல்.</td>
</tr>
<tr>
<td>விருப்பு</td>
<td>6. திட்டம் பற்றிய தகவல்கள் தொடர்ச்சியாக வெளியிடப்படுகிறது.<br>7. நலவாழ்வு தகவல் சேகரிப்பிற்கான தொடர்பாளர்களாக நலவாழ்வு குழுவை கருதுகின்றனர்.</td>
</tr>
<tr>
<td>பிரமாதம்</td>
<td>8. திட்டம் பற்றிய தகவல்கள் தொடர்ச்சியாக உடனுக்குடன் வெளியிடப்படுகிறது.<br>9. உள்ளூர் தகவல்களை வெளியிடுவதற்காக. சிறப்பு பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.<br>10. குழுவின் நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியான ஆதரவு அளிக்கின்றனர்.<br>11. நலவாழ்வு மேம்படுவதற்காக கொள்கை மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர்.</td>
</tr>
</table>

குறிப்பு : வழிமுறை வரைபடம் (STRATAGEY MAPS)

**I = Indivudual = தனிப்பட்ட**
**E = Environment = சூழல்**